HGH INDIA 2015
Homedécor ■■■ Gifts ■■■ Houseware
JULY 14-16, 2015 BOMBAY EXHIBITION CENTRE
NEWS 1
A TEXZONE Event
Where business feels at home!

## நான்காம் பதிப்பு

# ஆர்வமூட்டும் கண்டுபிடிப்புகள்

HGH இந்தியா 2015 ஷோ அதன் நான்காம் பதிப்பு புதிய உச்சங்களைத் தொடும் ஏற்பாடுகளைச் செய்திருக்கிறது. இந்தியாவின் வணிக தலைநகரமான மும்பையில் **ஜூலை 14-16, 2015** தேதிகளில் பாம்பே எக்ஸிபிஷன் சென்டரில் அரங்கேற தேதிகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. **ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஹோம் டெகோர், வீட்டுப் பொருள்கள்** மற்றும் **பரிசுப் பொருள்கள்** போன்ற சிறப்பு வர்த்தகத்தில் ஈடுபட்டிருக்கும் இந்திய சில்லறை வியாபாரிகள், இறக்குமதியாளர்கள், மொத்த வியாபாரிகள், நிறுவன மற்றும் வர்த்தக கொள்முதலாளர்களை இந்திய மற்றும் சர்வதேச பிராண்டுகள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் இணைக்கும் ஒரு பாலமாக இந்த நிகழ்ச்சி அமையும்.



HGH இந்தியா அறிமுகமான 2012 வருடத்திலிருந்து, குறிப்பிட்டுப் பேசப்படும் வகையில் மூன்று நிகழ்ச்சிகளை அரங்கேற்றி வெற்றி பெற்றிருக்கிறது. முதல் நிகழ்ச்சியில் காட்சிக்கு வைக்கப்பட்ட 140 பிராண்டுகள், உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்களின் எண்ணிக்கை இன்று வெகுவாக வளர்ந்து நான்காவது நிகழ்ச்சியில் 400 எண்ணிக்கையை எட்டியிருக்கிறது. நிகழ்ச்சியின் ஆரம்ப வருடம் 2012 ல் பதிவான 6,200 பார்வையாளர்கள் எண்ணிக்கை மூன்றாம் பதிப்பில் 15,650 ஆக உயர்ந்து இந்த வருடம் மேலும் குறைந்தது 25 சத விகிதம் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 80 சத விகிதத்திற்கும் அதிக எண்ணிக்கையில் பார்வையாளர்களும் காட்சி அமைப்பவர்களும் இந்த நிகழ்ச்சியில் ஆண்டுதோறும் தொடர்ந்து பங்கேற்றுக் கொண்டிருப்பது உற்சாகம் அளிக்கிறது. இந்த வணிக பொருட்காட்சியின் உயர் தர வர்த்தக வாய்ப்புகள் விற்பனையாளர்களுக்கும் கொள்முதல் செய்வோருக்கும் ஒருசேர நல்வாய்ப்புகள் அளித்து வருவது நிதர்சனம். வர்த்தகக் கண்காட்சியின் பரப்பளவு ஆரம்ப வருடத்துடன் ஒப்பிடும் போது 400 சத விகிதம் அதிகரித்திருக்கிறது.




**இந்தியா, இத்தாலி, ஜெர்மனி, ஸ்பெய்ன், பெல்ஜியம், பிரான்ஸ், யூகே, செக் ரிபப்ளிக், யூஎஸ்ஏ, கனடா, ஆஸ்திரேலியா, சைனா, தய்வான், கொரியா, தாய்லாந்து, ரஸ்யா, ஜோர்டான், டர்கி, ஹாங்காங், யூஏஇ** மற்றும் பல நாடுகளிலிருந்து புதிய உற்பத்திப் பொருள்கள், புதிய வடிவமைப்புகள் மற்றும் ஏற்கனவே சந்தையிலிருக்கும் பற்பல உற்பத்திப் பொருள்களுடன் உப பிரிவு இணை துணைப் பொருள்கள் வழக்கமான மற்றும் புதிய வாடிக்கையாளர்கள் HGH இந்தியா 2015 நிகழ்ச்சியில் காட்சிக்கு கொண்டு வருகிறார்கள். இந்தியாவின் பல முன்னணி பிராண்டுகள் தங்கள் புதிய கலெக்ஷன்களையும், முதன் முறையாக வடிவமைத்த புத்தம் புதிய தயாரிப்புகளையும் HGH இந்தியா நிகழ்ச்சியில் அறிமுகப்படுத்த இருக்கிறார்கள். அற்புதமான புதிய வகை தயாரிப்புகள், வடிவத்திலும் பயன்பாட்டிலும் மிகவும் புதிய அணுகல் என்று இந்த நான்காம் பதிப்பு பார்வையாளர்களை ஆச்சரியத்துடன் ஆர்வப்பட வைக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

இந்திய அரசின் '2022 வருடத்திற்குள் அனைவருக்கும் இருப்பிட வசதி' திட்டம் அடுத்த 7 ஆண்டுகளில் 30 மில்லியன் புதிய வீடுகள் கட்டப்படுவதற்கு ராஜபாட்டை அமைத்துக் கொடுத்திருக்கிறது. ஜிடிபி-யை அடிப்படையாகக் கொண்டிருக்கும் வாங்கும் திறன் சமநிலை (PPP) புள்ளி விபரப்படி இந்தியாவின் பொருளாதாரம் உலகளவில் 3ம் இடத்தில், அமெரிக்க மற்றும் சைனாவிற்கு அடுத்த நிலைக்கு முன்னேறியிருக்கிறது. அடுத்த 5 ஆண்டுகளில் ஜிடிபி வளர்ச்சி 7-9% அளவில் உயரும் என்ற அனுமானமும் 1.28 பில்லியன் மக்கள் தொகையுள்ள இந்தியார்கள் பெரும்பாலும் இளைய தலைமுறையினராக இருப்பதும், அடுத்த 15-20 வருட காலத்திற்கு அனைத்து பொருள்களும் பேரளவு வளர்ச்சியைச் சந்திக்க, உலக சந்தைகளில் இந்தியா ஒரு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கும். வளர்ந்து கொண்டிருக்கும் இன்றைய பொருளாதார முன்னேற்றம் மற்றும் மக்கள் தொகைப் பிரிவுகள் நிச்சயம் உள்நாட்டு ஜவுளிகள், ஃபர்னிஷிங், ஹோம் டெகோர் மற்றும் வீட்டு பயன்படு பொருள்களுக்கு, தற்போதைய ஆண்டு வளர்ச்சி ஆரோக்கியமான 25% ஆக இருந்து வருவதற்கும் மேலாக மிகப் பெரிய உந்துதலாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

பொருளாதார ரீதியாக முன்னேறிக் கொண்டிருக்கும் இன்றைய இந்திய நுகர்வோர் 30 வயதுக்கும்

குறைந்த இளைஞர்கள், இவர்கள் நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 60%. தங்கள் தினசரி வாழ்க்கையில் உயர்தர பிராண்டெட் பொருள்களையே இவர்கள் அதிகம் விரும்பி பயன்படுத்துகிறார்கள். ஆகையால், சில்லறை வியாபாரிகளும், அனைத்து பிரிவு சேனல் பார்ட்னர்களும் தங்கள் இலக்குகளை விரிவு படுத்தி மாற்றமடைந்து வரும் நுகர்வோர் விருப்பங்களுக்கு ஈடு கொடுக்கும் பிராண்டெட், உயர்தர மற்றும் புதுமையான தயாரிப்பு பொருள்களுடன், அது உள்நாட்டு தயாரிப்பாக இருந்தாலும் அல்லது சர்வதேச சந்தையில் கிடைப்பதாக இருந்தாலும் அவற்றுடன் தங்களைச் சம்பந்தப்படுத்திக் கொள்ளும் அவசியம் இன்று ஏற்பட்டிருக்கிறது.

**புதிய கண்டுபிடிப்புகள் • நடப்புகள் • புராடெக்டுகள் • தருவித்தல் வளம் • வாய்ப்புகள்**

# பெரிய மகத்தான இந்திய சந்தையை HGH இந்தியா வெளிச்சம் போட்டு காட்டுகிறது


325 பெருநகரங்கள் மற்றும் நகரங்களிலிருந்து சில்லறை வியாபாரிகள், வினியோகஸ்தர்கள் மற்றும் நிறுவன கொள்முதலாளர்கள் என்று இந்தியாவின் அனைத்து மாநில வியாபாரிகள் தங்கள் உற்பத்திப் பொருள்கள், விலை நிலவரங்கள் மற்றும் கொள்முதல் அளவுகளை இயல் நேரத்தில் ஒப்புநோக்கி திறமையாக போட்டி விலையில் இலாபகரமான வணிக நடவடிக்கைகளை மேற்கொண்டு தேசிய அளவில் வியாபாரம் செய்ய HGH இந்தியா உதவுகிறது.

95 சத விகித HGH இந்தியா பார்வையாளர்கள் உண்மையான கொள்முதலாளர்கள். ஹோம் டெக்ஸ்டைஸ், வீட்டு பயன்படு பொருள்கள், ஹோம் டெகோர் மற்றும் பரிசுப் பொருள்களைத் தேடி டிபார்ட்மென்டல் ஸ்டோர், ஹைபர் மார்கெட்ஸ், ஸ்பெஷால்டி ஸ்டோர்ஸ், இபிஓக்கள், டிஸ்கவுன்ட் ஸ்டோர்ஸ் மற்றும் ஆன்லைன் ரிடெய்லர்ஸ் பிரிவுகளிலிருந்து ஏஎஏ இந்தியாவில் கொள்முதல் செய்யும் பார்வையாளர்களாக வருகை புரிகின்றனர். கூடவே, வினியோகஸ்தர்கள், இறக்குமதியாளர்கள், வர்த்தகப் பிரதிநிதிகள், மொத்த வியாபாரிகள், நிறுவன மற்றும் கூட்டு நிறுவன பரிசு கொள்முதல் பிரதிநிதிகளும் HGH இந்தியாவிற்கு பெரிய எண்ணிக்கையில் வருகை புரிகின்றனர். இவர்களில் 90 சத விகிதத்திற்கும் அதிகமானவர்கள் வர்த்தக முடிவுகளை எடுக்கும் உயர் பதவி வகிப்பவர்கள்.

அதி வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் நகர, பகுதி நகர மற்றும் ஊரக இந்திய சந்தைகளில் வித்தியாசமான பற்பல நுகர்பொருள் பிரிவினரின் தேவைகளை பூர்த்தி செய்யும் பல நிலை சில்லறை வியாபாரிகள் தங்கள் சரக்குக் கொள்முதல் வழிகளைத் தேர்ந்தெடுக்க சிக்கனம், பிரீமியம் மற்றும் ஆடம்பர பிரிவுகளில், பிராண்டெட், பேரளவு உற்பத்தி மற்றும் கைவிணைப் பொருள்கள் என்று HGH இந்தியா பற்பல கொள்முதல் ஆதாரங்களுக்கு வழிவகை ஏற்படுத்திக் கொடுக்கிறது.


## பார்வையாளர்கள் மற்றும் காட்சி அளிப்பவர்கள்

அதிக பார்வையாளர்கள்
மொத்த பார்வையாளர்கள்




67.74% கூடுதல் 2012 வருடத்தை விட
50.48% அதிகம் 2013 வருடத்தை விட
152.41% அதிகம் 2012 வருடத்தை விட


பல துறைகளிலிருந்து பார்வையாளர்கள்
பல இந்திய நகரங்களிலிருந்து வந்திருக்கும் பார்வையாளர்கள்




92.86% கூடுதல்


HGH இந்தியா பார்வையாளர்களில் ஹோம் ரிடெய்லர்ஸ், இறக்குமதியாளர்கள், வினியோகஸ்தர்கள், நிறுவன மற்றும் வர்த்தக கொள்முதலாளர்கள் என்று அனைத்து பிரிவினர்களும் அடங்குவர்.

அதிக எண்ணிக்கையில் காட்சி அளிப்பவர்கள்
காட்சி அளிப்பவர்கள் மொத்த எண்ணிக்கை




78.57%% கூடுதல் 2012 வருடத்தை விட
20% அதிகம் 2013 வ்ருடத்தை விட
114% அதிகம் 2012 வருடத்தை விட

பல துறைகளிலிருந்து
காட்சி அளிப்பவர்கள்





12.5% கூடுதல்

HGH இந்தியாவில் காட்சி அளிப்பவர்களில் இந்திய மற்றும் சர்வதேச பிரான்டுகள், உற்பத்தியாளர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் என்று அனைத்து பிரிவினரும் அடங்குவர்


## HGH இந்தியா 2014 பார்வையாளர்கள் விபரம்

15,650 வர்த்தக பார்வையாளர்கள் இந்தியாவின் 325 பெருநகரங்கள் மற்றும் நகரங்களிலிருந்து HGH இந்தியா 2014 நிகழ்ச்சியில் பங்கேற்றது சென்ற வருடத்தை விட 50% அதிகம். இவர்களில் பெரும்பான்மையினர் மிகப் பெரிய ஸ்டோர்கள், ஸ்பெஷால்டி மற்றும் ஆன்லைன் ரிடெய்லர்கள், வினியோகஸ்தர்கள், நிறுவன கொள்முதலாளர்கள், கூட்டு நிறுவன பரிசு கொள்முதல் அதிகாரிகள் மற்றும் இன்டீரியர் டிசைனர் ஆகியோர் அதி நவீன பொருள்கள், புதுமை படைப்புகள் மற்றும் சப்ளையர்களிடம் ஆர்வம் காட்டினார்கள்.

வருகையாளர்கள் (பிசினெஸ் ரீதியாக)




பார்வையாளர்கள் (பணி ரீதியாக)




## HGH இந்தியாவிற்கு நான் ஏன் வர வேண்டும்?


- ஸ்பெஷால்டி ஸ்டோர்ஸ்
- டிபார்மென்ட் ஸ்டோர்ஸ்
- ஃபிரான்சைசீஸ் ஸ்டோர்ஸ்
- பாரம்பரிய கடைகள்
- ஹைபர் மார்கெட்ஸ்
- ஹோம் டெகோர் ரிடெய்லர்ஸ்
- ஹோம் டெகோர் பொடிக்ஸ்
- ஃபர்னிஷிங் ஸ்டோர்ஸ்
- ஹோம் டெக்ஸ்டைல் ரிடெய்லர்ஸ்
- வீட்டுப் பொருள்கள் ரிடெய்லர்ஸ்
- ஹார்டுவேர் ஸ்டோர்ஸ்
- நோவல்டி ஸ்டோர்ஸ்
- கிஃப்ட் ஸ்டோர்ஸ்
- கார்பொரேட் கிஃப்ட் கொள்முதலாளர்கள்
- கிஃப்ட் சப்ளையர்கள்
- நிறுவன கொள்முதலாளர்கள்
- இன்டீரியர் டிசைனர்ஸ்
- தொழில்முறையாளர்கள்
- சர்வதேச கொள்முதலாளர்கள்
- இறக்குமதியாளர்கள்
- வினியோகஸ்தர்கள்
- மொத்த விற்பனையாளர்கள்
- வர்த்தக பிரதிநிதிகள்

*இந்திய மற்றும் சர்வதேச பிராண்டுகள், தயாரிப்பாளர்கள், தொகுப்பாளர்கள், மற்றும் இறக்குமதியாளர்கள் வழங்கும் பல வகைப்பட்ட ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஃபர்னிஷிங்கஸ், ஹோம் டெகோர், வீட்டு பயன்படு பொருள்கள் மற்றும் பரிசுப் பொருள்கள் தருவித்தல் தலைவர்கள், விற்பனையாளர்கள், கொள்முதல் முடிவுகளை எடுக்கும் மூத்த அதிகாரிகளிடம் ஆர்வத்தை தோற்றுவிக்கும்.*

## HGH இந்தியாவிற்கு நீங்கள் ஏன் வர வேண்டும்?


- எதிர்வரும் சில்லறை வியாபார சீசன்களுக்கு கொள்முதல் செய்தல்
- மாற்றமடையும் ஃபேஷன் மற்றும் பொருள்களில் ஏற்படும் திருத்தங்களைப் புரிந்து கொள்ளுதல்
- புதிய பொருள்கள் மற்றும் கண்டுபிடிப்புகளைத் தெரிந்து கொள்ளுதல்
- பல வகையான பொருள்களையும் புதிய சப்ளையர்களையும் சேர்த்துக் கொள்ளுதல்
- உங்கள் கொள்முதல் வளத்தை பெருக்குதல்
- உங்கள் கொள்முதல் வளத்தை மேலும் திறமையுள்ளதாகவும் தாமதத்தைக் குறைப்பதாகவும் மேம்படுத்துதல்

அனைத்து வணிக பிரிவினர் வருகை அதிகரிப்பு




பார்வையாளர்கள் பணி விபரம்

வர்த்தக முடிவு எடுப்பவர்கள் வருகை அதிகரிப்பு




பார்வையாளர்கள் (பணி ரீதியாக)

**கூடுதல் விபரங்களுக்கு: www.hghindia.com ■ போன். மும்பை: +91 22 2421 4111 ■ தில்லி: +91 11 2571 4111 ■ Email: info@hghindia.com**

# ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஹோம் டெகோர், வீட்டு பயன்படு பொருள்கள் மற்றும் பரிசுப் பொருள்களை ஒருங்கிணைத்து வழங்குகிறது HGH இந்தியா

இன்று நவீன சில்லறை வியாபாரங்களில் ஆர்வம் கொண்டிருக்கும் புதிய வியாபாரிகள், இந்திய நுகர்வோர் எளிதாகத் தெரிந்து கொள்ள முடிகிற சர்வதேச விஷயங்கள் ஆகியவை இந்திய வீட்டு சில்லறை விற்பனைகளில் ஒரு புரட்சியை நிகழ்த்திக் கொண்டிருக்கிறது. வீட்டு பிரிவைப் பொருத்த வரையில் இன்று அனைத்து இந்திய வியாபாரிகள், பேரளவு கடை அமைப்பாளர்கள் (LFS), ஃபிரான்ஸைசீஸ், ஸ்பெஷால்டி ஸ்டோர்ஸ், பொடிக்ஸ் மற்றும் ஆன்லைன் ரிடெயிலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்த கொள்முதல் வழியைப் பின்பற்ற ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டினால், அவர்கள் கடை அமைப்பு நவீனமாகத் தோன்றுவதுடன் தங்கள் வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூரணமாக நிறைவேற்றவும் முடிகிறது. உலகளவில் பார்க்கும் போது, ஹோம் டெக்ஸ்டைல்ஸ், ஃபர்னிஷிங்க்ஸ், ஹோம் டெகோர், வீட்டு பயன்படு பொருள்கள் மற்றும் பரிசுப் பொருள்கள் அனைத்தும் ஓரிடத்தில் சில்லறைக் கடைகளில் கிடைக்கச் செய்யும் ஏற்பாடுகள் வெகுவாக வரவேற்கப்படுவது கண்கூடாத் தெரிகிறது.

மூன்று நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நிறைவேற்றியிருக்கும் HGH இந்தியாவை ஆதரித்துக் கூறும் பார்வையாளர்களும் காட்சி அளிப்பவர்களும் தொழில்முறையாளர் திறனுடன், வியாபார நோக்குடன் செயல்பாடும் ஈடுபாட்டினால் புத்தம் புது பொருள்கள் சந்தையில் அறிமுகமாவதுடன்

அடுத்த பருவத்திற்கான வியாபார போக்கும் நிலைப்பட்டுவிடுகிறது. வர்த்தகக் கண்காட்சியில் நிலவும் தொழில் ரீதியான வர்த்தகமுறை சூழலில் நுகர்வோர்கள் அனுமதிக்கப்படாமல், சில்லறை விற்பனைகள் செய்யப்படாததால், வர்த்தக கொள்முதலாளர்களுக்கு காட்சி அளிப்பவர் கவனம் சிதறாமல் பணிபுரிய இயலுகிறது.











## காட்சி அளிப்பவர்கள் கருத்துரை:

''பார்வையாளர்கள் வந்த வண்ணம் இருக்கிறார்கள். முக்கியமாக, வரும் பார்வையாளர்கள் அனைவரும் முதல் தர வர்த்தகர்கள். HGH இந்தியா நிறுவி செயல்படுத்தும் நிகழ்ச்சி மிகச் சிறப்பாகவும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் ஈடுபாட்டுடன் நடத்தப் படுகிறது.''

***தீபாலி கோயங்கா,***
*மேனேஜிங் டைரக்டர், வெல்ஸ்பன் இந்தியா லிமிடெட்.*

''ஒண்டர்ஃபுல் ஷோ! நான் முதல் முறையாக இங்கே வந்திருக்கிறேன், இந்த நிகழ்ச்சியில் இதற்கு முன்னரும் கூட பங்கேற்றிருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. HGH இந்தியா டீம் மிகச் சிறப்பாக தன் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. கீப் இட் அப்! முதல் நாளன்றே, ஆரம்பித்த ஒரு சில மணி நேரத்திற்குள் இவ்வளவு பிசினெஸ் நடந்திருப்பதைப் பார்க்கும் போது, இது மிகச் சிறந்த நாள் என்று எண்ணத் தோன்றுகிறது. சிம்ப்ளி ஃபன்டாஸ்டிக்.''

***பிளஸ் சுடன்,***
*டைரக்டர், ரேடியன்ஸ் லண்டன்*

''மிகப் பெரிய எண்ணிக்கையில் கொள்முதலாளர்களும் சப்ளையர்களும் HGH இந்தியா 2014 நிகழ்ச்சிக்கு வந்திருக்கும் போது, நாங்களும் இந்த நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக விரிவாகுகிறோம் என்று நிச்சயமாகக் கூற இயலும். எங்கள் துறையைப் பொருத்த வரையில் இந்தக் கண்காட்சி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது, இந்த கண்காட்சியின் வளர்ச்சி எங்கள் துறையான ஃபர்னிஷிங் சந்தை இந்தியா போன்ற நாடுகளில் மேன்மேலும் விரிந்து பெருக உதவும்.''

***நிமிஷ் அரோரா,***
*மேனேஜிங் டைரக்டர், டிசிடெக்ஸ் ஃபர்னிஷிங்க்ஸ் லிமிடெட்.*

''இந்த கண்காட்சி அற்புதமாக இருக்கிறது. இங்கே இருப்பதும் ஒரு சிறந்த அனுபவம். இதர கண்காட்சிகளில் முதல் நாள் பார்வையாளர்கள் வருகை சோம்பலாக இருக்கும், ஆனால் HGH இந்தியா கண்காட்சியில் முதல் நாளிலேயே பார்வையாளர்கள் நிரம்பி வழிகின்றனர். எங்கள் தற்போதைய சப்ளையர்களையும், புதிய சப்ளையர்களையும் சந்திக்க இக் கண்காட்சி ஒரு பாலம் அமைத்துக் கொடுத்திருக்கிறது. இதில் முக்கியமானது என்னவென்றால், வர்த்தகர்கள் மற்றும் சில்லறை வியாபாரிகள் தவிர தேவையில்லாத பார்வையாளர்கள் யாரும் இங்கே இல்லை.''

***முகுல் கோயல்,***
*டைரக்டர், தத்வா ஆர்ட் ஹார்டுவேர்*

''இது நாளுக்கு நாள் சிறப்படைந்து வருகிறது. எங்கள் ஒரு வருட வியாபாரத்தை இங்கே ஒரு நாளில் முடித்துக்கொள்ள முடிகிறது. பற்பல சர்வதேச பிராண்டுகளை நாங்கள் இந்தியாவில் பிரதிநிதித்துவம் செய்து கொண்டிருக்கிறோம், இவை இங்கே புதிய தேவைகளை உருவாக்கியிருக்கிறது, உள்நாட்டு உற்பத்திக்கு இவை எந்த அபாயங்களையும் ஏற்படுத்தவில்லை.''

***ராஜீவ் மெர்சன்ட்,***
*மேனேஜிங் டைரக்டர், இந்தியன் ஹோம் வேரியேஷன்ஸ் அண்ட் டிஸ்டிரிபூஷன்ஸ் லிமிடெட்.*

''HGH இந்தியா வருடா வருடம் பெரிதாக வளர்ந்து கொண்டிருக்கும் காரணம் என்னவென்றால், உற்பத்தியாளர்களும் பிராண்டுகளும் இந்திய முழுவதிலும் தங்கள் புதிய கொள்முதலாளர்கள், சில்லறை வியாபார்கள் மற்றும் விநியோகஸ்தர்களைச் சந்திக்க ஒரு சிறந்த தளம் அமைத்துக் கொடுத்திருக்கிறது.''

***ராஜேஷ் மகஜன்,***
*மேனேஜிங் டைரக்டர்,*
*மாஸ்பர் இண்டஸ்டிரீஸ் பிரைவேட் லிமிடெட்*

## பார்வையாளர்கள் கருத்துரை:

''ஒட்டுமொத்த ஹோம் புராடெக்ட்களை ஓரிடத்தில் கொண்டு வந்திருக்கும் கண்காட்சி, இந்த துறைக்கு மிகவும் தேவையான ஒன்று. HGH இந்தியா செய்துவரும் இந்த சேவை துறைக்கு மிகவும் தேவையான உத்வேகம் அளிக்கும். சில்லறை வியாபாரிகள் தங்கள் கொள்முதல்களை நாடு முழுவதிலும் இருந்து பெறும் வசதி கிடைக்கிறது.''

***ஜகதிஷ் கண்டெல்வால்,***
*சேர்மேன், ஜகதிஷ் ஸ்டோர்ஸ், தில்லி.*

''HGH இந்தியா ஹோம் புராடெக்ட் துறையில் ஒரு பெரிய நிகழ்வாக இருக்கும். உள்ளூர் சந்தைகளில் செயல்படும் ரிடெய்ல் வியாபாரிகள் மற்றும் சேனல் பார்ட்னர்கள் மற்றும் இந்திய சந்தைகளில் கால் பதிக்க விரும்பும் சர்வதேச பிராண்டுகளுக்கும் இந்த கண்காட்சி மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது, ஒரு மிகச் சிறந்த தளம் அமைத்துக் கொடுக்கிறது.''

***சிகே நாயர்,***
*சிஓஓ, ஹோம் ஸ்டாப்.*

''முன்னணி உற்பத்தியாளர்கள் பிராண்டுகளின் ஹோம் புராடெக்டுகள் ஒரே இடத்தில் கிடைக்கச் செய்திருக்கும் HGH இந்தியாவில் எங்களுக்கு மிக அற்புதமான அனுபவம் கிடைத்தது. முன்பெல்லாம், தீபாவளி சீசனுக்கு வணிகப் பொருள்களைத் தேடி பல இடங்களுக்கும் சென்று அலைய வேண்டியிருந்தது. HGH இந்தியா நிகழ்ச்சியில் கிடைக்கும் பொருள்கள் தனித்துவம் வாய்ந்தவையாகவும் ஒப்பற்றதாகவும் இருப்பதால் எங்கள் தேவைகளில் 90% வரை இங்கே காட்சி அளிப்பவர்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறோம். வேறு எந்த கண்காட்சியும் இது போன்ற ஒப்பற்ற வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில்லை.''

***சனத் படேல்,***
*விஷ்வேஷ் டெக்ஸ்டைல்ஸ், சென்னை*

**ஜூலை 14-16, 2015 பாம்பே எக்ஸிபிஷன் சென்டர், கொரேகாம் (கி), மும்பை.**

# புதியவை !



## கேண்டில் மற்றும் வாசனைப் பொருள்கள்

புதிய பிரிவுகளாக
இந்தியாவில் அறிமுகமாகின்றன

## வால்பேப்பர்ஸ்

உலகில் புதிதாகப் படைக்கப்பட்டவை
இந்தியாவிற்கு வருகை

## வீட்டு பயன்படு பொருள்கள்

புதிய இந்திய மற்றும்
சர்வதேச உற்பத்தியாளர்கள்

## வால் கவரிங்

புத்தம் புது வகைகள்
வியாபாரத்தில் புதுமை

## விண்டோ பிளைண்ட்ஸ்

நுகர்வோர் விருப்பம் அதிகரித்து
விற்பனை வாய்ப்புகளைப் பெருக்கி
சந்தை வளர்ச்சியை மேம்படுத்தும்

## சைனா பெவிலியன்

20 காட்சி அளிப்பவர்கள், பெரும்பாலும்
ஹோம் டெகோர் வால்பேப்பர்,
பேக்ஸ் மற்றும் இன்ன பிற
புது வகைகளும் பொருள்களும்

## ஜுயூபால்

ஸ்பானிஷ் பிராண்டு
வீட்டிற்குத் தேவைப்படும்
வீட்டு பயன்படு பொருள்கள்

## ரோசெட்டி

உலகளவில் பெயர்பெற்ற இத்தாலியன்
பிராண்டு, சமீபத்திய
குக்வேர் சாதனங்கள் மற்றும்
கிச்சன் துணைப் பொருள்கள்

## தரை விரிப்புகள்

இப்பொழுது கவருங்கள்
இந்திய வியாபாரிகளின் கவனத்தை

# Visitor
## Registration Form

HGH INDIA 2015
Homedécor ■■■ Gifts ■■■ Houseware
Redefining Sourcing

☐ Mr. ☐ Ms. ☐ Mrs.

Name ______

Designation ______

Company ______

Address ______

City ______ Pin Code ______ State ______

Telephone (Off.) ______ Fax ______

Mob 1 ______ Mob 2 ______

Email 1 ______ Email 2 ______

Website ______

**A. Type(s) of your Business (Please tick ☑)**

**Retailer**
- ☐ Department Store
- ☐ Mail Order House
- ☐ Hyper Market
- ☐ Discount Store
- ☐ Speciality Stores(MBOs) ______
- ☐ Speciality Stores(EBOs) ______
- ☐ Traditional Store
- ☐ Boutique
- ☐ Cash and Carry
- ☐ Other ______

**Trade Representative**
- ☐ Sales Agent
- ☐ Brand Representative
- ☐ Distributor
- ☐ Importer
- ☐ Wholesaler

**Buyers**
- ☐ Interior Designer
- ☐ Corporate Gifts
- ☐ Gift Suppliers
- ☐ Buying Houses

**E-Commerce**
- ☐ Online Retailers
- ☐ TV Shopping
- ☐ Mail Order
- ☐ Other ______

**Industry**
- ☐ Manufacturer
- ☐ Brand Owner
- ☐ Exporter

**Others**
- ☐ Service Provider
- ☐ Trade Association
- ☐ Government

**B. Products of your interest**

**Home Décor**
- ☐ Ceiling
- ☐ Wall
- ☐ Windows
- ☐ Floor
- ☐ Decorative Accessories
- ☐ Lifestyle

**Home Textiles**
- ☐ Sleeping
- ☐ Bath
- ☐ Table & Kitchen
- ☐ Living
- ☐ Furnishing

**Gifts**
- ☐ Corporate
- ☐ Personal
- ☐ Festive

**Houseware**
- ☐ Cookware
- ☐ Kitchen Appliances
- ☐ Tableware
- ☐ Bathroom
- ☐ Maintenance
- ☐ Cleaning
- ☐ Storage
- ☐ Outdoor

**Services**
- ☐ Trade Publication
- ☐ Institutional
- ☐ Retail Management
- ☐ Logistic
- ☐ Visual Merchandising
- ☐ IT Solutions
- ☐ Other Support Services (Specify) ______

**C. Purpose of your visit**
- ☐ Source International Products
- ☐ Meet Current Suppliers
- ☐ Product Innovations/Trends
- ☐ Other (Please Specify) ______
- ☐ Source Indian Products
- ☐ Find Agent / Distributor
- ☐ Market Information
- ☐ Find New Suppliers
- ☐ New Business Opportunities

**D. How did you learn about this Trade Show?**
- ☐ Internet
- ☐ Hoardings
- ☐ Other (Please Specify) ______
- ☐ Email
- ☐ Advertisements
- ☐ Website
- ☐ From Exhibitor
- ☐ Direct Mailer
- ☐ From Organiser
- ☐ Newspaper
- ☐ Word of Mouth

**E. Have you visited any previous edition of HGH India?**

☐ HGH India 2012 ☐ HGH India 2013 ☐ HGH India 2014 ☐ All Editions ☐ None

***Important notes:***
*1) Incomplete form in any respect will not be accepted. It is mandatory to fill the column Invited by.*
*2) HGH India is strictly a Trade Show. Therefore entry to consumers is not allowed. No retail purchase permitted. You can be disqualified if found doing retail purchases. 3) Children below 15 years are not allowed*

Duly filled form to be sent by Fax: +91-22-2421 4116 or Email: visitors@hghindia.com or by post latest by 1st July, 2015 to the address mentioned below. You can also register online at www.hghindia.com>visitors>visitor registration

**ஒருங்கிணைப்பாளர்கள்: டெக்ஸ்ஜோன் இன்ஃபர்மேஷன் சர்விசெஸ் பிரைவேட் லிமிடெட்**
431, காலியந்தாஸ் உத்யோக் பவன், செஞ்சுரி பவன் அருகில், பிரபாதேவி, மும்பை - 400025.
போன்: +91(22) 2421 4111 ஃபேக்ஸ்: +91 (22) 2421 4116 மின்அஞ்சல்: exhibitors@hghindia.com
**தில்லி அலுவலகம்:** யூனிட் நெ. 1003, விக்ராந்த் டவர், ராஜேந்திர பிளேஸ், புது தில்லி - 100 008.
போன்: +91 (11) 2571 4111 ஃபேக்ஸ்: +91 (11) 25714116 மின்அஞ்சல்: exhibitors@hghindia.com

**காட்சி அளிப்பவர் தொடர்பு**
**இந்தியா:** முகேஷ் அகர்வால் அலுவலகம்:+91 (22) 2421 4111 மொபைல்: +91 98 213 10453
மின்அஞ்சல்: mukesh.agarwal@hghindia.com
ஐரோப்பா: பியா ரைசென், எக்ஸ்போ+ கன்சல்டிங் அசோசியேட்ஸ், ஆம்ஸ்டெர்டாமெர்ஸ்டிர்.44,
டிஇ - 40474 டுசெல்டார்ஃப், ஜெர்மனி.
போன்:: +49 2 116549453 ஃபேக்ஸ்: + 49 2 116549456 மின்அஞ்சல்: pia.ryhsen@expoandconsulting.com

**பார்வையாளர் தொடர்பு இந்தியா**
திரு. ராஜீவ் ஜெய்ன் மொபைல்: +91 99 676 00247 அலுவலகம்: +91 (22) 2421 4111
மின்அஞ்சல்: visitors@hghindia.com
மிஸ். வித்யா வர்த்மான் மொபைல்: +91 99 676 00576 அலுவலகம்: +91 (22) 2421 4111
மின்அஞ்சல்: visitors@hghindia.com

**More Information: www.hghindia.com ■ Tel. Mumbai: +91 22 2421 4111 ■ Delhi: +91 11 2571 4111 ■ Email: info@hghindia.com**